# பத்திரிக்கைச் செய்தி

புகார்தாரர், திரு.M.செந்தில், த/பெ மூக்கன், கிழக்கு தெரு, 5வது வார்டு உறுப்பினர், சேந்தமங்கலம், வாடிப்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம் என்பவர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, மதுரை பிரிவு அலுவலகத்திற்கு வந்து, அவருடைய மனைவி திருமதி.இந்திரா பெயரில், சேந்தமங்கலத்தில் உள்ள இரண்டு புஞ்சை நிலங்களை, உட்பிரிவு செய்து பட்டா மாறுதலுக்கு பரிந்துரை செய்வதற்காக, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா, தனிச்சியம் பிர்க்கா, பொறுப்பு - பாலமேடு பிர்க்கா சர்வேயர் திருமதி.P.சந்திரா அவர்களை அணுகியதாகவும், அப்போது மேற்படி பிர்க்கா சர்வேயர், இரண்டு புஞ்சை நிலங்களை உட்பிரிவு செய்து, இரண்டு பட்டா மாறுதல்களுக்கு பரிந்துரை செய்து பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வதற்காக, ஒவ்வொன்றிற்கும், தலா ரூ.5,000/- வீதம் மொத்தம் ரூ.10,000/- லஞ்சமாக கேட்பதாக புகார் மனு அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 30.06.2023 நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திருமதி.P.சந்திரா, க/பெ பாஸ்கரன், பிர்க்கா சர்வேயர், தனிச்சியம் பிர்க்கா, பொறுப்பு - பாலமேடு பிர்க்கா, வாடிப்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம் அவர்கள் லஞ்ச பணமான ரூ.10,000/-ஐ புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்று கொண்ட போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

-----